# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No.28/2025 DW.1

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்:** | : | அழகப்பன் | **த–பெ /க.பெ.** | சிதம்பரம் |
| **ஊர்:** | : | கானாடுகாத்தான் | **சமயம்:** | |
| **வயது:** | : | 76/2026 | **வட்டம்:** | |
| **தொழில்:** | : | ரியல் எஸ்டேட் கன்சல்டன்ட் | **மாவட்டம்** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2026**

-----------------------------------------------------------------------------------------------------

**02.04.2026**
**முதல் விசாரணை:**

1) புகார்தாரர் எனது எதிர்வீட்டுக்காரர் அவரை நன்றாகத்தெரியும். அவர் எனக்கு உறவு முறை ஆவார். நவம்பர் 2023 அன்று நான் ரியல் எஸ்டேட் செய்துவரும் தொழிலுக்கு பணத்தேவை இருந்தது. புகார்தாரர் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார் என்று தெரிந்து கொண்டு அவரிடம் சென்று முதலில் ரூ. 2 லட்சம் கேட்டேன். அவர் எனக்கு வங்கி கணக்கு மூலம் ரூ. 2 லட்சம் கடனாக கொடுத்தார். பின்னர் 10 முறை 8 மாதங்களில் ரூ.16 லட்சம் வரை புகார்தாரரிடன் இருந்து கடனாகப்பெற்றேன். அவர் எனக்கு மேற்படி தொகைகளை வங்கி கணக்கு மூலம் கொடுத்தார். எனக்கு பணம் வரவேண்டிய இடத்திலிருந்து வர தாமதம் ஆனதால் என்னால் அவருக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் பணத்தை திருப்பி செலுத்த முடியவில்லை. பின்னர் 2024 நவம்பர் மாதம் புகார்தாரர் என்னை அணுகினார். அன்றைய தினம் புகார்தாரர் என்னிடம் இருந்து 26 லட்சத்திற்கான காசோலையையும், கேட்பு கடனுறுதி சீட்டும் அவரது வழக்கறிஞர் கேட்கசொன்னதாக கேட்டு என்னிடம் ஆதரவாக பெற்றுக்கொண்டார். மேற்படி காசோலை மற்றும் கேட்புகடனுறுதிசீட்டு ஆகிவற்றை காரைக்குடி பிரசிடென்ஸ் ஹோட்டலில் வைத்துக்கொடுத்தேன்.

2) அப்போது புகார்தாரரிடம் நான் 16 லட்சம்தான் கடன் வாங்கினேன். ஆனால் 26

லட்சத்திற்கு ஆவணங்கள் கேட்கிறீர்கள் என்று கேட்டேன் அதற்கு அவர் நான் இதை ஒரு பாதுகாப்பு ஆவணமாகத்தான் கேட்கிறேன் என்றும் அதை வைத்து சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்போவது இல்லை என்று சொன்னார். பின்னர் 10 நாட்கள் கழித்து என் நண்பரிடம் ரூ. 10 லட்சம் கடன் வாங்கி புகார்தாரரிடம் அதே பிரசிடென்சி ஹோட்டலில் வைத்து ரொக்கமாக ரூ.10 லட்சம் கொடுத்தேன். மேலும் அன்றைய தினம் புகார்தாரரிடம் 2 முதல் 3 மாதம் காலஅவகாசம் கொடுக்குமாறும் அதற்குள் மீத தொகையான ரூ.16 லட்சத்தை 2, 3 மாதங்கள் கழித்து கொடுத்துவிடுவதாக சொன்னேன். மேற்படி காசோலையையும், கேட்புகடனுறதிசீட்டையும் புகார்தாரர் எனது உறவினர் என்பதாலும், அவரது வழக்கறிஞர் கேட்டார் என்பதாலும், நானும் அவரும் வங்கியில் பணிபுரிந்தவர்கள் என்பதாலும், நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன்.

3) ஆனால் மேற்படி காசோலை மற்றும் கடனுறதிசீட்டை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்வார்என்று நான் எதிர்பாக்கவில்லை.எனவே மோசடியாக தாக்கல் செய்த இந்த வழக்கை தள்ளுபடி செய்து என்னை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.02 16:56:22 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)